

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.2.2025) திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் சிப்காட் தொழிற்பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 3,800 கோடி ரூபாய் முதலீட்டில் 4000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் டாடா குழுமத்தின் துணை நிறுவனமான டாடா பவர் சோலார் நிறுவனம் அமைத்துள்ள 4.3 GW Solar Cell மற்றும் Module உற்பத்தி ஆலையை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மருத்துவர் கே.பி. கார்த்திகேயன், டாடா பவர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பிரவீர் சின்ஹா மற்றும் தலைமைச் செயல் அலுவலர் டிபேஷ் நந்தா, அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.2.2025) திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் சிப்காட் தொழிற்பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 2574 கோடி ரூபாய் முதலீட்டில், 2500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் விக்ரம் சோலார் நிறுவனம் 3 GW solar Cell மற்றும் 6 GW Module உற்பத்தி ஆலை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சி. ராபர்ட் புரூஸ், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.அப்துல் வகாப், ரூபி மனோகரன், நயினார் நாகேந்திரன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண்ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மருத்துவர் கே.பி. கார்த்திகேயன், விக்ரம் சோலார் நிறுவனத்தின் தலைவர் எமரிட்டஸ், ஹரிகிருஷ்ண சௌத்ரி, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் க்யானேஷ் சௌத்ரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு அவர்களின் 100வது பிறந்தநாளினை முன்னிட்டு கோயம்புத்தூர் மாவட்டம் அன்னூர் வட்டம் வையம்பாளையம் கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் அமையப் பெற்றுள்ள உழவர் பெருந்தலைவர் சி நாராயணசாமி நாயுடு அவர்களின் திருஉருவச் சிலைக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மின்சாரத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தார்கள். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, மாநகராட்சி மேயர் திருமதி.ஆ.ரங்கநாயகி ராமச்சந்திரன், வருவாய் கோட்டாட்சியர் கோவிந்தன், தமிழக விவசாயிகள் சங்க தலைவர் வேட்டவலம் மணிகண்டன், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலர் ஆ.செந்தில் அண்ணா ஆகியோர் உள்ளனர்.

## மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. தலைமையில்

# பொன்னேரியில் - மோடி அரசுக்கு எதிராக மாபெரும் கண்டன பொதுக்கூட்டம்!

## டாக்டர்.கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி., ஆவடி பாஸ்கர் கண்டன உரை!

திருவள்ளூர், பிப்.7

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டுக்கு அநீதி இழைத்து வஞ்சித்த பாசிச மோடி அரசுக்கு எதிரான மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நாளை (8.2.2025 சனிக்கிழமை) மாலை 5 மணியளவில் பொன்னேரி ஹரிஹரன் பஜார் வீதியில் மாவட்டச் செயலாளரும் கும்முடிப் பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் தலைமையில் நடைபெறுகிறது.

டாக்டர்.கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி, தலைமை கழக சொற்பொழிவாளர் ஆவடி பாஸ்கர் பங்கேற்று கண்டன உரையாற்றுகிறார்கள்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் 2025-2026-ஆம் ஆண்டு மத்திய அரசு நிதிநிலை அறிக்கையில் மாற்றான் தாய் போக்குடன், தமிழ்நாட்டை வஞ்சித்த, மோடி அரசின் தலைமையிலான பாசிச அரசை கண்டித்து மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் பொன்னேரியில் நடைபெறுகிறது.

பொன்னேரி நகர செயலாளர் வழக்கறிஞர்.ஜி.ரவிக்குமார், பொதுக்குழு உறுப்பினர் பொன்னேரி நகர மன்ற தலைவர் டாக்டர்.பரிமளம் விஸ்வநாதன், எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ், நா.செல்வசேகரன், கா.சு.ஜெகதீசன், பி.முத்து, க.சு.தமிழ்உதயன், ருக்மணி மோகன்ராஜ், ப.அலெக் சாண்டர் ஆகியோர் வரவேற்புரை நிகழ்த்து கிறார்கள்.

மாவட்ட அவைத்தலைவர் மு.பகலவன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜெ.மூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் மு.கதிரவன், எம்.எல்.ரவி, கேவிஜி.உமாமகேஸ்வரி, மாவட்ட பொருளாளர். எஸ்.ரமேஷ், பொதுக்குழு உறுப்பினர்கள். கே.சுப்பிரமணி, பி.வெங்கடாசலபதி, ஏ.வி.ராமமூர்த்தி, பா.செ.குணசேகர், பொன்னேரி நகர நிர்வாகிகள் கோ.செங்கல்வராயன், எம்.நீலகண்டன், ஜி.ஐவகர், ஜெ.பரிதா ஜெகன், ஆர்.ராமலிங்கம், பி.எஸ்.வாசுதேவன், எம்.முரளிதரன், செ.யுவராஜ், இரா.கதிரவன், வெற்றி(எ) ராஜேஷ், முகமதுஅலவி, ஜி.பி.வெங்கடேசன், மு.தினக ரன், ஏ.கே.சம்பத்குமார், டாக்டர்.வில்சன்நிலவழகன், எஸ்.ரோஸ்பொன்னையன், தேசராணிதேசப்பன், எஸ்.முருகானந்தம், உமாகாத்தவராயன், பத்மாசீனிவாசன், சஞ்சய்காந்தி, சூர்யா இளங்கோவன், கே.சரவணன், எஸ்.அசோக்குமார், எஸ்.ராஜேந்தரன், து.ஈஸ்வரன், வி.சூர்யபிரகாஷ், வி.காமராஜ், சி.மு.தேவன், கா.சுரேஷ்சீனு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாநில மருத்துவ அணி தலைவர் மாநிலங்களவை உறுப்பினரும் கழக செய்தி தொடர்பாளருமான டாக்டர்.கனிமொழி என்.வி.என்.சோமு, அமைச்சர் ஆவடி. சா.மு.நாசர், இ.ஏ.பி.சிவாஜி, தலைமை கழக சொற்பொழிவாளர் ஆவடி. பாஸ்கர், மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், கே.ஜி.பாங்கர் சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏ.ஆர்.டி.உதயசூரியன், ஏ.கே.சுரேஷ், செந்தமிழ்ச்சி, ஒன்றிய பேரூர் செயலாளர்கள் மு.மணிபாலன், கி.வே.ஆனந்தகுமார், டி.கே. சந்திரசேகர், ஆ.சத்தியவேல், ஜான்(எ)பொன்னுசாமி, ந.பரிமளம், இரா.அறிவழகன், அபிராமிகுமரவேல் கண்டன உரை நிகழ்த்துகின்றனர்.

மாவட்ட ஒன்றிய கழக மூத்த முன்னோடிகள், உள்ளாட்சி மன்ற இந்நாள், முன்னாள் நிர்வாகிகள், முன்னாள் மாவட்ட குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், பொன்னேரி நகர வார்டு செயலாளர்கள், நகர் மன்ற உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய நகர பேரூர் கழகங்களின், முன்னாள் இந்நாள் நிர்வாகிகள்,முன்னாள் இந்நாள் கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி மன்ற வார்டு கவுன்சிலர்கள், பேரூராட்சி கவுன்சிலர்கள், கூட்டுறவு சங்கத்தின் முன்னாள் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

முடிவில் பொன்னேரி நகர இளைஞர் அணி அமைப்பாளர் மா.தீபன் நன்றி கூறுகிறார்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்றத் தொகுதி பள்ளிப்பட்டு ஒன்றியத்திற்கு உட்பட்ட திருமால்ராஜ பேட்டை, ராமச்சந்திராபுரம், சூரராஜ பட்டடை, கள்ளமேடு காலனியில், ரங்கையாபள்ளி, கரிமேடு, சாமந்தவாடா, பாண்டரவேடு உள்ளிட்ட ஊராட்சியில் 1 கோடி 50 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையம் கட்டிடம், தொடங்க பள்ளி வகுப்பறை கட்டிடம், பேருந்து நிழற்குடை , புதிய நியாய விலை கடை, அங்கன்வாடி மையம் கட்டிடம், கலையரங்கம், உள்ளிட்ட பல்வேறு கட்டிடங்களை பயன்பாட்டிற்கு திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, திறந்து வைத்தார் உடன் ஒன்றிய கழகச் செயலாளர் வழக்கறிஞர் சி.ஜே.சீனிவாசன் பொதுக்குழு உறுப்பினர் ராஜேஸ்வரி ரவீந்திரநாத், ஒன்றிய அவைத்தலைவர் திருமலை லோகநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்கள்

## ஜமைக்கா நாட்டில் உயிரிழந்த

# தமிழரின் உடலைக் கொண்டுவர நடவடிக்கை!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, பிப்.7-

“ஜமைக்கா நாட்டில் உயிரிழந்த தமிழரின் உடலை தமிழ்நாட்டிற்குக் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது” என்று தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

ஜமைக்கா நாட்டின் டர்க்ஸ் மற்றும் கைகோஸ் தீவுகளில் உள்ள J.K. Food Mart Company இல், பணிபுரிந்த தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த விக்னேஷ் என்பவர், 18.12.2024 அன்று அங்கு நடந்த கொள்ளை முயற்சியில், கொள்ளையர்களால் சுடப்பட்டு உயிரிழந்தார்.

விக்னேஷ் அவர்களின் உடலை தமிழ்நாடு கொண்டு வரக்கோரிய அவரது குடும்பத்தினரின் கோரிக்கையினை ஏற்று, முதலமைச்சரின் உத்தரவின் பேரில், தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம் மூலம், ஜமைக்கா நாட்டிலுள்ள இந்திய தூதரகம் மற்றும் அவர் பணிபுரிந்த நிறுவனம் தொடர்பு கொள்ளப்பட்டு, உயிரிழந்த விக்னேஷ் உடலை தமிழ்நாடு கொண்டு வர கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

விக்னேஷ் உடல் 30.12.2024 அன்று பிணக் கூராய்வு செய்யப்பட்ட நிலையில், அவருக்கான இழப்பீட்டை அவர் வேலை செய்த நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து வழங்க தமிழ்நாடு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், அன்னாரது உடலை தமிழ்நாடு கொண்டுவருவதற்கான செலவினத்தை தமிழக அரசே ஏற்கும்.

விக்னேஷ் வேலை செய்த நிறுவனத்துடன், தொடர்பு ஏற்படுத்தப்பட்டு, நிலைமை தொடர்ந்து அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகத்தினால் கண்காணிக்கப் பட்டு, உடலை மீட்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், உடல் தமிழ்நாடு கொண்டு வரப்படும் நிலையில் விமான நிலையத்திலிருந்து, அவரது இல்லம் வரை அரசின் கட்டணமில்லா அமரர் ஊர்தி மூலம் கொண்டு செல்லப் படும்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## அயலகத் தமிழர் மற்றும் மறுவாழ்வுத் துறை

# துணை இயக்குநர் ரமேஷ் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப். 7-

அயலகத் தமிழர் மற்றும் மறுவாழ்வுத் துறை துணை இயக்குநர் ரமேஷ் அவர்களின் மறைவிற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் மற்றும் மறுவாழ்வுத் துறை துணை இயக்குநர் ரமேஷ் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருத்தமடைந்தேன்.

தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழர்களின் நலனுக்காக நமது அரசு மேற்கொண்டு வரும் திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்துவதில் மிக முக்கியப் பங்காற்றி வந்தவர் ரமேஷ் என்பது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமின்றி, உக்ரைன் போர்க் காலக்கட்டத்தில், அங்கிருந்து நமது மாணவர்களை அழைத்து வருவதில் திறம்படச் செயலாற்றியவர். அயலகங்களில் தமிழர்களுக்கு இன்னல் நேரும் போதெல்லாம் அவர்களுக்கு முன்னின்று உதவிடும் மனப்பாங்கு கொண்டவர் அவர்.

ரமேஷ் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவருடன் பணியாற்றி வந்த சக அதிகாரிகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



துறைமுகம் சட்டமன்ற தொகுதி. மண்டலம்5, வார்டு 57, ஜார்ஜ் டவுன், பிராட்வே சாலை, பிரகாசம் தெருவில் வருவாய் துறைக்கு சொந்தமான இடத்தில் நேற்று (6.2.2025) வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் புதிய திட்டப்பணிகள் மேற்கொள்வதற்காக அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான .பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன், வருவாய்த்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.பெ. அமுதா, , வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர். சு.பிரபாகர், சி.எம்.டி.ஏ. முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவீன் குமார், மண்டலக் குழுத்தலைவர் ஸ்ரீராமலு, தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய கண்காணிப்பு பொறியாளர் இளம்பருதி, சென்னை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சு.கீதா, மண்டல அலுவலர் திருமதி.பரிதா பானு. மாமன்ற உறுப்பினர் எம்.இசட்.ஆசாத் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெறுகிறது. இரண்டாம் கட்டமாக கடலூர் கிழக்கு & கடலூர் மேற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 3.00 மணி | கடலூர் மேற்கு | தொ.மு.ச. அலுவலகம், நெய்வேலி, கடலூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 01-02-2025

